பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 03 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. புதை படிவமற்ற எரிபொருட்களின் பயன்பாடு **50** சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. சட்டப்பேரவைத் தேர்தலில் முதியோர், மாற்றுத் திறனாளிகள், தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் தபால் மூலம் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
3. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் கூட்டணி அமைப்பது, தொகுதி பங்கீடு தொடர்பான அரசியல் கட்சிகளின் பேச்சு வார்த்தைகள் தீவிரமடைந்துள்ளன.
4. தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Nirav Shetty — Anup Bangargi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>>

புதை படிவமற்ற எரிபொருட்களின் பயன்பாடு **50** சதவீதத்திற்கும்மேல் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்தியா மின்சார உச்சிமாநாட்டின் தொடக்க விழாவுக்கு அவர் அனுப்பிய கடிதத்தில், வரும் **2030**-ஆம் ஆண்டுக்குள் புதை படிவமற்ற எரிபொருள் மூலம் **500** கிகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த உச்சிமாநாட்டின் மூலம், எரிசக்தி மற்றும் மின் துறையில் பல்வேறு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து தகவல்களை பரிமாற வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சாரத்தை தொடர்ந்து போற்றி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வடமாநிலங்களில் கொண்டாடப்படும் நவராத்திரி விழாவின் முதல் நாளான இன்று பிரதமர் தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட ஸ்ரீதுர்கா பாடலை முன்னிலைப்படுத்தி வாழ்த்து தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் முதியோர், மாற்றுத் திறனாளிகள், தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் தபால் மூலம் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தல் ஆணையம் இதுதொடர்பாக இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் படிவம் 12 D -ஐ பய்னபடுத்தி, வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலம் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

வாக்கு சேகரிக்கும் குழுக்கள் இந்த வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகளை சேகரிப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கான கால அட்டவணை தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு, வேட்பாளர்களுக்கும் இந்த தகவல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் தேதிகளில் அத்தியாவசியப் பணிகளில் ஈடுபட உள்ள வாக்காளர்கள் தங்கள் துறையின் ஒருங்கிணைப்பு அலுவலர் மூலம் தபால் வாக்கு வசதிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தீயணைப்புத்துறை, சுகாதாரம், மின்சாரம், ஆம்புலன்ஸ் சேவைகள், விமான போக்குவரத்து, அரசு சாலை போக்குவரத்துக்கழகங்கள் போன்றவை இந்த வசதியின்கீழ் வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும், தபால் மூலம் வாக்களிக்க வசதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர்கள் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதலாவது சம வாய்ப்புக்கு

உட்படுத்துதல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தருமபுரி, அரியலூர் மாவட்டங்களில் வரும் 20-ஆம் தேதியும், சென்னை, திருவளூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 32 மாவட்டங்களில் வரும் 23-ஆம் தேதியும், விருதுநகர், புதுக்கோட்டை, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் வரும் 24-ஆம் தேதியும், தேனி மாவட்டத்தில் 25-ஆம் தேதியும் இந்த சம வாய்ப்புக்கு உட்படுத்துதல் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

அங்கீரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திர மேலாண்மை முறை வாயிலாக சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலரால் இதுமேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்தபின்னர் இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பட்டியல் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் வழங்கப்படும் என்றும் திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் தொடங்குவதற்கு இன்னும் பத்து நாட்களே உள்ள நிலையில், தொகுதி பங்கீடு, கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இதுதொடர்பாக, பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன், கூட்டணி தொகுதி பங்கீடு தொடர்பான ஆலோசனைகள் ஓரிரு நாட்களில் மேற்கொள்ளப்படும் என்றார்.

திருநெல்வேலியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல் விரைவில் தமிழகம் வந்தபின்னர் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றார்.

இதற்கிடையே, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, கட்சிகளுடன் தொகுதி பங்கீடு தொடர்பான ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றன.

<<<<<<>>>>>>

ஜவுளி ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு **21** சதவீதமாக உள்ளது என்று திமுக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த நான்கு ஆண்டுகளில் ஜவுளி ஏற்றுமதியில் தமிழகம் **29** சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக கூறியுள்ளார்.

ஜவுளி ஏற்றுமதியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

மேற்காசியாவில் நிலவும் பிரச்சினை காரணமாக பஹ்ரைனில் சிக்கிய **192** இந்தியர்கள் சிறப்பு தனி விமானம் மூலம் இன்று சென்னை வந்தடைந்தனர்.

பஹ்ரைனில் உள்ள தமிழ் சங்கத்தை சேர்ந்தவர்கள் இதற்கான சிறப்பு ஏற்பாடுகளை செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(*Voice Byte — செங்கல்பட்டு சுரேகா - 38 Sec. )*

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte — வி ஆர் துரை 37 Sec. )*

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திண்டுக்கல் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு இலட்சினையை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு சரவணன் வெளியிட்டார்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் தபால் வாக்கு செலுத்தும் வகையில், 12-D படிவம் வழங்கப்பட்டு வருகிறது.

--------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மகளிர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு தர்பகராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

மயிலாடுதுறை மாவட்டம் சங்கரன்பந்தலில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட வாகன சோதனையில இரண்டு ஐம்பொன் சிலைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Nirav Shetty — Anup Bangargi** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-3, 4-6, 13-11** என்ற செட் கணக்கில் இந்தியாவின் ஆதித்யா விஷால் — விஷ்ணுவர்தன் இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சித்தார்த் ராவத் மற்றும் சசி குமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<<END>>>>>>**